TNRM010018292024

முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ம் நாள் செவ்வாய்கிழமை

**O.S.No.62/2024**

**CNR No: TNRM01-001829-2024**

****

1) கமலா, வயது 56, க/பெ. தட்சிணாமூர்த்தி, கதவு எண் 1/126, பள்ளிவாசல் தெரு, அத்தியூத்து கிராமம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) கோகிலா, வயது 38, க/பெ. வினோத்பாபு, கதவு எண் 8/187, T.வாலுர் கடற்கரை சாலை, சித்தார்கோட்டை அஞ்சல், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

3) நூருல்காவாஸ், வயது 34, க/பெ. முகமது ஆதம், கதவு எண் 7/1203, பனைக்குளம் கிழக்கு, பனைக்குளம் அஞ்சல், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

4) அபிராமி, வயது 33, த/பெ. தட்சிணாமூர்த்தி, கதவு எண் 1/128, பள்ளிவாசல் தெரு, அத்தியூத்து கிராமம், அத்தியூத்து அஞ்சல், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

..... **வாதிகள்**

**/எதிர்/**

ஆனந்தசிவா, வயது 35, த/பெ. தட்சிணாமூர்த்தி, சோகையன்தோப்பு, பனைக்குளம் அஞ்சல், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

..... **பிரதிவாதி**

****

தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய 4/5 பாகத்தை பிரித்துக்கொள்ளும் வகையில் முதல்நிலைத்தீர்ப்பாணை வழங்கும்படிக்கும், முதல்நிலை தீர்ப்பாணையின்படி தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 4/5 பங்கை நயமிளப்பம் வைத்து பிரித்துவிட சமூகம் கோர்ட், ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து அதனடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கும்படிக்கும், தாவா சொத்துக்களில் வாதிகளின் கூட்டனுபவத்தை பிரதிவாதி யாதொரு வகையிலும் தடையிடைஞ்சல் செய்யக்கூடாதென சாஸ்வத இன்ஜங்சன் பரிகாரம் வழங்கியும், இவ்வழக்கிற்காகும் செலவுத்தொகையை பிரதிவாதியே

செலுத்தும்படிக்கும் தீர்ப்புச் செய்யும்படி வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

தாவா வியாஜ்ஜிய மூலம் 01.02.2024, 10.02.2024 இராமநாதபுரம் வட்டம், அழகன்குளம் குரூப், அழகன்குளம் கிராமத்திலும், இராமநாதபுரம் வட்டம், அத்தியூத்து குரூப், அத்தியூத்து கிராமத்திலும், இராமநாதபுரம் வட்டம், சூரங்கோட்டை குரூப், சூரங்கோட்டை கிராமத்திலும், இராமநாதபுரம் வட்டம், தேர்போகி குரூப், புதுவலசை கிராமத்திலும் வைத்து உற்பத்தி.

தாவா வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு ரூ.31,75,400/-. அதில் வாதிகளுக்குரிய 4/5 பங்கு சொத்தின் மதிப்பு ரூ.25,40,320/- என மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் 14/55 சட்டப்பிரிவு 37(2)-ன்படி ரூ.5000/-ம், வாதிகள் கோரும் தாவா சொத்தை பொறுத்தான சாஸ்வத இன்ஜங்சன் பரிகாரத்திற்கு ரூ.1000/-ம் என மதிப்பிட்டு அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டப்பிரிவு 27(c)ன்படி ரூ.30/-என ஆக மொத்தம் ரூ.5,030/- நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் நாள்: 28.03.2024 & 29.04.2024.

இவ்வழக்கானது 13.08.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது வாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.N. பாலாஜி B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டார். வாதிகளை அழைத்தும் ஆஜரில்லாத நிலையில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்..

## தீர்ப்பாணை

1. வாதிகளை அழைத்தும் ஆஜரில்லாததாலும் வாதிகள்தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யப்படாதநிலையில் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. செலவுத்தொகை பற்றிய உத்தரவு ஏதும் இல்லை.

TNRM010018292024

<u>**சொத்து விபரம்**</u>

1. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம வட்டம், அழகன்குளம் குரூப், அழகன்குளம் கிராமத்தில் பழைய பட்டா எண் 1322 ல் கண்ட சர்வே எண் 4, புஞ்சை விஸ்தீரணம் 1.80.5 ஏர்ஸ் ஏக்கர் 4 செண்டு 46 இதில் உள்ள தென்னைமரங்கள் 50, பனைமரங்கள் 50, மா மரம் 9, கிணறு, மின் இணைப்பு, மோட்டார் உள்பட இதற்குமால்.

வடக்கு : வள்ளியம்மாள் புஞ்சை

கிழக்கு : மாணிக்கநாடார் வகையறா புஞ்சை

தெற்கு : கிழமேலோடிய மங்கம்மாள் சாலை

மேற்கு : ஓடை புறம்போக்கு.

2. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், அத்தியூத்து குரூப், அத்தியூத்து கிராமத்தில் பட்டா எண் 579 ல் கண்ட சர்வே எண் 302/3, புஞ்சை விஸ்தீரணம் 0.35.0 விஸ்தீரணத்தில் செண்டு 86 ல் கீழ்புறம் செண்டு 43 இதற்கு மால்.

வடக்கு : காட்டுராஜா புஞ்சை

கிழக்கு : முத்துச்சாமி மகன் தில்லைமுத்து மேற்படியார் மனைவி நாகவள்ளி இவர்கள் புஞ்சை

தெற்கு : வண்டிப்பாதை

மேற்கு : ராபியா அம்மாள் புஞ்சை

3. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் டவுன், சூரங்கோட்டை குரூப்பில். G.R.சர்வே எண் 345/296 பார்ட், இதில் டவுன் சர்வே 8/2A1A பிளாக் 16–இல் 3 செண்ட் அளவுள்ள இடம் மனை. இதற்கு மால்.

வடக்கு : சந்தானம் இடம்

கிழக்கு : கோபால், செல்வராணி இடம்

தெற்கு : பாலமுருகன் இடம்

மேற்கு : ரோடு

4. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், தேர்போகி குரூப், உள்கடை புதுவலசை கிராமத்தில் பட்டா எண் 197 ல் கண்ட சர்வே எண் 36/1, ஏக்கர் 20 ல்

TNRM010018292024

சப்டிவிஷன் சர்வே எண் 36/1D க்கு பரப்பு 4.06.0 ஏர்ஸில் கீழ்புறம் ஏக்கர் 2 புஞ்சை, இதற்கு மால்.

வடக்கு : யாக்கூப் அம்பலம் இடம்

கிழக்கு : தென்வடல் ஓடை

தெற்கு : கிழமேல் ரஸ்தா

மேற்கு : முகம்மதுயூசுப் புஞ்சை

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**O.S.No.62/2024**

**தீர்ப்பாணை**

**நாள்: 13.08.2024.**